சுருக்கம்

பொதுப்பணிகள் – கல்லூரிக் கல்வி – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணையடிப்படையில் பணிநியமனம் – கல்லூரிக் கல்வி இயக்ககம் – திரு.அ.அருண்குமார், இளநிலை உதவியாளர் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (ஜி2) துறை

அரசாணை (2டி) எண். 22

நாள். 21.05.2020.
சார்வரி வருடம், வைகாசி– 8
திருவள்ளுவர் ஆண்டு, 2051.

படிக்கப்பட்டவை:–

கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.41939/பி1/2019, நாள்.09.01.2020.

----

ஆணை :–

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் செங்கற்பட்டு, இரா.வே,அரசு கலைக் கல்லூரியில் வணிகவியல் இணைப் பேராசிரியராகப் பணியாற்றி பணியிலிருக்கும் போது 12.05.2010 அன்று இயற்கையெய்திய திரு.எஸ்.அமரன் என்பவரது வாரிசுதாரரும், மகனுமான திரு.அ.அருண்குமார் என்பவருக்கு கல்லூரிக் கல்வி இயக்ககத்தில் கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டு 05.06.2018 முற்பகல் பணியில் சேர்ந்தார். அன்னார் பணி நியமனத்தின்போது எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்றுள்ளதாலும், அத்தனியரின் பிறந்த தேதி 25.03.1994 என்றும், அன்னாரின் பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் 05.06.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்டு தற்போது, கல்லூரிக் கல்வி இயக்ககத்தில் பணிபுரியும் திரு.அ.அருண்குமார் என்பவரது பணியினை 05.06.2018 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்து ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன் முறைப்படுத்தப்படுவதால் தனியரின் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைகள் ஏதுமிருப்பின் விதிகளின்படி அவற்றைப் பெற்றிடத் தகுதியுடையவராகிறார். மேலும் இதனை தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ள நியமன அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார்.

...2

2 50 copies



3. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அ.சா.எண்.7389/ட்டி1/2020, நாள். 11.05.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறையின் அ.சா.எண். 11549 /ஜி2/2020, நாள். 15.05.2020–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப் படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை-6.

சம்பந்தப்பட்ட தனியர் (கல்லூரிக் கல்வி இயக்குநர் வழியாக)

சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர் (கல்லூரிக் கல்வி இயக்குநர் வழியாக)

<u>நகல்</u>

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(ட்டி1) துறை/பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஜி) துறை, சென்னை -9.

அரசு முதன்மைச் செயலாளரின் தனிச்செயலர், உயர்கல்வித்துறை, சென்னை–9.

இகோ/உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

22/5/2020

பிரிவு அலுவலர்.

21/5/2020